

: tamil

Informasjon til asylsøkere i Norge

NOAS

# நோர்வேயில் புகலிடம்

## கோருபவர்களுக்கான தகவல்கள்

இக் கையேடு நோர்வேயில் புகலிடம் கோருபவர்களுக்கான சங்கத்தால் தயாரிக்கப்பட்டது (NOAS).
NOAS என்பது அரசு சார்பற்ற மனித உரிமைகளுக்கான அமைப்பாகும். இது புகலிடம் கோருபவர்களுக்கு தகவல் மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குகிறது.

நோர்வேயில் புகலிடம் கோரும் உங்களுக்கும் மற்றும் பாதுகாப்பு கோரி விண்ணப்பிப்போருக்குமான முக்கிய தகவல்களை இக்கையேடு கொண்டுள்ளது.

*இதில் நீங்கள் கீழுள்ளவற்றைப் பற்றி வாசிக்கலாம்:*

- பாதுகாப்பு பெறும் உரிமை யாருக்கு உண்டு?
- மனிதாபிமான அடிப்படையில் யாருக்கு தங்கும் அனுமதி கிடைக்கலாம்?
- உங்கள் புகலிட விண்ணப்பம் எந்த நாட்டில் பரிசீலிக்கப்படும்?
- உங்கள் புகலிட விண்ணப்பத்தை நோர்வேயில் பரிசீலிப்பது யார்?
- நீங்கள் பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்கும் போது என்ன நிகழ்கிறது?
- புகலிட நேர்காணலிற்கான முக்கிய அறிவுரைகள்
- புகலிட விண்ணப்பதாரி என்ற ரீதியில் உங்களது பொறுப்புகளும் உரிமைகளும்
- தகவல் பாதுகாப்புக் கடமை

## 1. பாதுகாப்பு பெறும் உரிமை யாருக்கு உண்டு?

தாய்நாட்டிற்கு மீள் பயணம் செய்வதால் நீங்கள் பாரதூரமான அத்துமீறல்கள், சித்திரவதை, கொலை ஆகிய ஆபத்துக்களை எதிர்நோக்கினால், உங்களுக்கு பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை உண்டு. தாய்நாட்டின் அதிகாரிகளால் உங்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியுமாயின் அல்லது உங்கள் தாய்நாட்டில் பாதுகாப்பான பிராந்தியங்கள் இருந்தால் வழமையாக நோர்வேயில் பாதுகாப்பைப் பெறும் உரிமை உங்களுக்கு இருக்காது.

பாதுகாப்புப் பெறும் உரிமையை யார் கொண்டுள்ளனர் என்ற தீர்மானம் சர்வதேச ஒப்பந்தங்களால் வரையறுக்கப்பட்டுள்ளதோடு இவற்றைப் பின்பற்றும் கடமையை நோர்வே கொண்டுள்ளது.

## 2. மனிதாபிமான அடிப்படையில் யாருக்கு தங்கும் அனுமதி கிடைக்கலாம்?

பாதுகாப்பைக் கோரும் உரிமை உங்களுக்கு இல்லாவிடின், வலுவான மனிதாபிமான காரணங்கள் அல்லது நோர்வேயில் நீங்கள் கொண்டுள்ள விசேட தொடர்புகள் காரணமாக உங்களுக்கு தங்கும் அனுமதி வழங்குவதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளீர்களா என்பதை அதிகாரிகள் பரிசீலிப்பார்கள். இது மனிதாபிமான அடிப்படையிலான தங்கும் அனுமதி என அழைக்கப்படும்.

இவ்வாறான ஒரு தங்கும் அனுமதியைப் பெறுவதற்கு வழமையாக கடவுச்சீட்டை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் அரச அதிகாரிகளுக்கு கடவுச்சீட்டைக் கையளிக்காவிடின் இதனால் உங்களுக்கு விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் அல்லது நிரந்தர தங்கும் அனுமதி மற்றும் குடும்ப மீள் இணைவிற்கான உரிமையை வழங்காத ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி மட்டும் உங்களுக்கு கிடைக்கலாம்.

## 3. உங்கள் புகலிட விண்ணப்பம் எந்த நாட்டில் பரிசீலிக்கப்படும்?

நோர்வேயில் புகலிட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் அனைவரது விண்ணப்பங்களும் நோர்வேயில் பரிசீலிக்கப்படுவதில்லை. டப்ளின் ஒப்பந்தமானது ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான கூட்டுப்பணியாகும். இதன்படி உங்களது விண்ணப்பம் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு நாட்டில் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

கீழ்வரும் நிலைமைகளில் உங்களது விண்ணப்பம் டப்ளின் ஒப்பந்தத்தில் அடங்கிய வேறொரு நாட்டினால் கையாளப்படலாம். இது பிற நாட்டில்:

- உங்களின் கைரேகை பதிவு செய்யப்பட்டிருந்தால்
- நீங்கள் புகலிடம் கோரி விண்ணப்பத்திருந்தால்
- உங்களிடம் விசா அல்லது தங்கும் அனுமதியிருந்தால்
- உங்களது நெருங்கிய குடும்பத்தார் அங்கு இருந்தால்

நீங்கள் வேறொரு நாட்டிற்கு மாற்றப்பட வேண்டுமா என்பதை நோர்வே அதிகாரிகள் ஆராய்ந்து முடிவு செய்தவற்கு, சாதாரணமாக இரண்டு முதல் ஆறு மாதங்கள் வரை எடுக்கலாம்.

இது பற்றி மேலதிக விவரங்களை அறிய விரும்பினால், டப்ளின் ஒப்பந்தம் பற்றிய ஒரு பிரத்யேக கையேட்டை நீங்கள் NOASஇலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 4. உங்கள் புகலிட விண்ணப்பத்தை நோர்வேயில் பரிசீலிப்பது யார்?

வெளிநாட்டவர் விவகார ஆணையகம் (UDI) ஆனது நோர்வே அரசின் ஒரு அங்கமாகும். இவர்கள் உங்களுடன் நேரடி சந்திப்பில் உரையாடி உங்களுக்கு தங்கும் அனுமதி வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள். UDI அனைத்து புகலிட விண்ணப்பங்களையும் நுணுக்கமாகவும் தனிப்பட்ட ரீதியிலும் பரிசீலனை செய்யும்.



## 5. நீங்கள் பாதுகாப்பக்கோரி விண்ணப்பிக்கும் போது என்ன நிகழ்கிறது?

**புகலிட விண்ணப்பதாரியென பொலிசில் நீங்கள் பதிவு செய்து கொள்வீர்கள்**

பொலிசார் உங்கள் புகைப்படம் மற்றும் கைரேகையை எடுப்பார்கள். உங்களது அடையாளம், நோர்வேயிற்கு நீங்கள் எவ்விதம் வந்து சேர்ந்தீர்கள் மற்றும் எக்காரணத்திற்காக நீங்கள் பாதுகாப்புக்கோரி விண்ணப்பிக்கிறீர்கள் என்பது போன்ற விடயங்களை UDI விசாரிப்பார்கள். நீங்கள் அடையாளப்பத்திரங்கள் கொண்டு வந்திருந்தால் இவற்றை பதிவு செய்யும் போது வழங்கவேண்டும்.

**நீங்கள் ஓர் அகதிமுகாமிற்கு இடம் மாறுவீர்கள்**

பதிவிற்கு பின்னர் நீங்கள் ஆரம்ப காலத்தில் தங்கியிருப்பதற்கான முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். இங்கு சில காலம் தங்கிய பின்னர் வேறொரு இடைத்தங்கல் முகாமிற்கு அல்லது ஒரு சாதாரணமான முகாமிற்கு இடம் மாற்றப்படுவீர்கள். முகாமில் உங்களது கடமைகள் மற்றும் உரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களை முகாமிலுள்ள ஊழியர்கள் உங்களிற்கு வழங்குவர்.

**நீங்கள் காசநோய் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவீர்கள்**

முதற்கட்ட முகாமிலுள்ள ஆரம்ப நாட்களில் நீங்கள் காசநோய்ப்பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவீர்கள். இது அனைவருக்கும் கட்டாயமானது. அவசர சிகிச்சை தேவைப்படும் பாரதூரமான உடல்நலக்குறைபாடுகள் உங்களுக்கு இருந்தால், இது விடயமாக நீங்கள் சுகாதார நிலையத்திற்கு தெரிவிக்கவும்.

**உங்களுக்கு NOAS லிருந்து தகவலும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்**

முதற்கட்ட முகாமிலுள்ள ஆரம்ப நாட்களில் NOAS ஆல் உங்களுக்கு தகவல்கள் வழங்கப்படும். NOAS ஆனாது நோர்வேயில் புகலிட விண்ணப்பதாரிகளுக்கான உரிமைகள் குறித்து செயற்படும் ஓர் அரச சார்பற்ற மனித உரிமைச் சங்கமாகும்.
முதற்கட்ட முகாமிலுள்ள காலத்தில் NOAS இன் செயற்பாடானது புகலிட விண்ணப்பதாரிகளுக்கு தகவல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதலாகும். புகலிட விடயச்செயல்முறை பற்றிய ஒரு தகவல் திரைப்படத்தை உங்களுக்கு காண்பிப்பதுடன் NOAS ஊழியர் ஒருவர் உங்களுடன் உரையாடுவார்.
இந்த உரையாடலின் நோக்கமானது, உங்களை UDI உடனான புகலிட விடய நேர்காணலுக்கு தயார்படுத்துவதாகும். பாதுகாப்பு கோருவது பற்றி நீங்கள் மனதில் கொண்டுள்ள அனைத்துக் கேள்விகளையும் இந்த உரையாடலின் போது கேட்டுக்கொள்வது முக்கியம். இந்த உரையாடல் நீங்கள் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் நடாத்தப்படும்.



டப்ளின் விதிமுறைகளின் பிரகாரம் நீங்கள் வேறு ஓர் ஐரோப்பிய நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறு இருப்பின், நீங்கள் சரியான தகவலைப் பெறுவதன் பொருட்டு, இதை தெரிவிப்பது முக்கியம்.

NOAS இல் பணிபுரிவோர் தகவல் பாதுகாப்புக் கடமையைக் கொண்டுள்ளனர்.

**UDI உங்களுடன் நேர்முகமாக உரையாடும்**

நீங்கள் ஏன் பாதுகாப்புக் கோரி விண்ணப்பிக்கிறீர்கள் என்பதை விளக்கிச் சொல்ல, புகலிட நேர்காணல் ஒரு மிக முக்கிய வாய்ப்பாகும். சாதரணமாக, புகலிட நேர்காணல் பல மணி நேரங்கள் நீடிக்கும். உங்களது அனுபவங்களை நுணுக்கமாகவும், விவரமாகவும் விளக்கிக் கூறுவதுடன், தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்ல நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் என்பதையும் கூறவும். நேர்காணலின் போது ஒரு மொழிபெயர்ப்பாளர் உடனிருப்பார். மொழிபெயர்ப்பாளர் தகவல் பாதுகாப்புக் கடமையை கொண்டிருப்பதுடன், அவர் பக்கசார்பற்றவர். சொல்வதைப் புரிந்து கொள்வதில் உங்களுக்கு சிரமங்கள் ஏதும் இருந்தால், அது குறித்து நேர்காணல் செய்பவரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

புகலிட நேர்காணலின் முடிவில், நேர்காணலின் போது என்ன கூறப்பட்டது என்பது குறித்த ஒரு அறிக்கையில் நீங்கள் கையெழுத்திட வேண்டும். இதை மொழிபெயர்ப்பாளர் உங்களுக்கு வாசித்துக் காட்டுவார். அறிக்கையில் மாற்றங்கள் ஏதும் செய்ய விரும்பினால், கையெழுத்திடும் முன்னர் இதை நீங்கள் தெரிவிக்கவேண்டும்.

**ஒரு சாதாரனமாண முகாமிற்கு மாற்றப்பட்டு UDIஇலிருந்து பதில் வரும்வரை அங்கு தங்கியிருப்பீர்கள்**

முகாமில் வசிப்பது இலவசம். UDIயிலிருந்து பதிலைக் காத்திருக்கும் வேளையில் நீங்கள் தனிப்பட்ட முறையில் வேறொரு இடத்திலும் தங்கலாம், இவ்வாறாயின் உங்களுக்கு நிதியுதவி ஏதும் கிடைக்காது. நீங்கள் இடம் மாறினால் அதை முகாமிற்கு தெரிவிக்க வேண்டும். உங்கள் புதிய முகவரியைப் அவர்கள் பதிவு செய்வர். UDIயின் பதில் உங்களுக்கு கிடைப்பதற்கு தகுந்த வண்ணம் உங்களது முகவரி பதிவு செய்யப்பட்டிருப்பது முக்கியம்.

**புதிய தகவல்**

புகலிட நேர்காணலின் பின்னர், உங்கள் புகலிட விண்ணப்பத்திற்கு அர்த்தமுள்ள புதிய தகவல்கள் உங்களுக்கு வந்தடைந்தால், நீங்கள் இதை UDIக்கு உடனடியாக தெரிவித்தல் நன்று. இந்த தகவலை முன்னர் ஏன் குறிப்பிடவில்லை என்பதை விளக்கிக்கூறவும். இதைச் செய்வது எப்படி என்று முகாம் ஊழியர்கள் உங்களுக்கு விளக்குவார்கள்.

**UDI யிலிருந்து ஒரு பதிலுக்காக நீங்கள் காத்திருப்பீர்கள்:**
உங்களது புகலிட விண்ணப்பத்தைக் கையாள UDIக்கு சில வாரங்களில் இருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கூட எடுக்கலாம். நீங்கள் வழங்கிய தகவல்கள் சரியானதுதானா என்பதை UDI ஆராய வேண்டுமென்பதால், அதிக காலம் பிடிக்கலாம். உங்களது தாய்நாட்டின் நிலைவரத்தை UDI ஆராய்தல், அல்லது வேறுபலர் UDIயின் பதிலுக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதும் காரணமாக இருக்கலாம்.

## உங்களுக்கு UDIயிலிருந்து ஒரு பதில் கிடைக்கும்: தங்கும் அனுமதி அல்லது நிராகரிப்பு

**தங்கும் அனுமதி**
உங்களுக்கு தங்கும் அனுமதி அளிக்கப்பட்டால், உள்ளூர் நகர சபை ஒன்றில் குடியமர்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். முகாமில் உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் வழங்கப்படும்.

**நிராகரிப்பு**
உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், மேன்முறையீடு செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. மேன்முறையீடு செய்வதற்கு உங்களுக்கு உதவ சாதாரணமாக ஐந்து மணித்தியாலங்கள் இலவசமான வழக்கறிஞர் உதவி வழங்கப்படும். மூன்று வாரங்களுக்குள் நீங்கள் மேன்முறையீடு செய்ய வேண்டும். உங்கள் விண்ணப்பம் அடிப்படையற்றது என வெளிப்படையாக UDI கருதும் பட்சத்தை தவிர, மேன்முறையீடு கையாளப்படும்போது சாதாரணமாக நீங்கள் நோர்வேயில் தங்கலாம்.

**வெளிநாட்டவர் விவகார மேன்முறையீட்டு நீதிமன்றம் (UNE)**
UNE உங்களின் மேன்முறையீட்டை பரிசீலனை செய்யும். UNE உங்களை ஒரு சந்திப்பிற்கு அழைக்கலாம், அல்லது மேலதிக தகவல்களை அனுப்பி வைக்கும்படி கோரலாம்.

**உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், நீங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்லும் கடமையைக் கொண்டுள்ளீர்கள்**
இவ்வாறாயின் பொலிசார் வழமையாக வழங்கும் காலக்கெடுவான இரண்டு வாரங்களிற்குள் நீங்கள் தாய்நாடு திரும்ப வேண்டும். இந்த காலக்கெடுவுக்கு பின்னர் நோர்வேயில் வசிப்பதற்கு சட்டரீதியிலான உரிமை உங்களுக்கு இல்லை.
நீங்கள் இறுதி நிராகரப்பை பெற்றால், அதாவது UDI இன் பாதுகாப்பு நிராகரிப்பை UNE அங்கீகரித்தால், ஒன்றில் நீங்கள் சுயவிருப்பத்தின் பேரில் புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (IOM) மூலமாக திரும்பச் செல்லலாம், அல்லது பொலிசாரால் நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம் (பலவந்தமாக வெளியேற்றுதல்).

**IOMஇன் உதவியுடன் சுயமாக விரும்பி நாடு செல்லல்**
உங்கள் தாய்நாட்டிற்கு நீங்கள் சுயவிருப்பத்துடன் மறுபயணம் செல்ல நோர்வே அரசு வழிவகுக்கும். சுயவிருப்பத்துடன் மீள்பயணம் என்பதன் பொருள், நோர்வேயில் நடைமுறையான மீள்பயணத் திட்டமான உதவியுடன் சுயவிருப்பத்துடன் மீள்பயணம் செல்லுதல்(Voluntary Assisted Return Programme -VARP) என்றழைக்கப்படும் திட்டத்தின் கீழ் தாய்நாட்டுப் பயணத்துக்கு ஒத்துழைக்க விண்ணப்பம் செய்தல்.

VARP என்பது UDI மற்றும் IOM ஆகியவற்றுக்கிடையேயான ஒத்துழைப்பாகும், இவர்கள் உங்களின் தாய்நாட்டுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்வார்கள். நீங்கள் சுயமாக விரும்பி மீள்பயணம் செய்தால், அதற்கான செலவை நோர்வே அரசு செலுத்தும்.

நோர்வேயில் தங்கும் அனுமதியற்ற அனைவரும் சுயவிருப்பத்துடன் மறுபயணம் செல்ல விண்ணப்பிக்கலாம். உங்களது புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், நோர்வேயை விட்டு நீங்கள் வெளியேறுவதற்கான காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் சுயவிருப்பத்துடன் மீள்பயணம் செல்ல விரும்பினால், உங்களின் புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட குறுகிய காலத்தினுள், நீங்கள் IOMக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். உங்களின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், உங்களது பயணத்துக்கான ஆவணங்களைப் பெறவும், பயணச்சீட்டுகளைப் பெறவும் IOM வழிவகுத்து அத்தோடு அவற்றைப் பெறவும் உதவும். IOM ஊடாகப் பயணம் செய்ய, உங்களிடம் ஒரு செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது உங்கள் தாய்நாட்டின் அதிகாரிகளால் விநியோகிக்கப்பட்ட வேறு பயண



ஆவணத்தை நீங்கள் வைத்திருக்க வேண்டும். உங்களிடம் செல்லுபடியாகும் ஒரு கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணம் ஏதும் இல்லையென்றால், புதிய ஒன்றை அருகிலுள்ள உங்கள் தூதரகத்திற்கு/தேசப் பிரதிநிதியின் காரியாலயத்திற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள IOM உங்களுக்கு உதவக்கூடும். பயணத்தின் போதும் மற்றும் தாய்நாட்டிற்கு நீங்கள் வந்திறங்கியவுடனும், நீங்கள் விரும்பினால் IOM உங்களுக்கு உதவும்.

சுயவிருப்பத்துடன் மீள்பயணம் பற்றிய மேலதிகத் தகவல்கள் மற்றும் உங்களது விண்ணப்பத்தை நிரப்புதலிற்கான உதவியை உங்கள் அகதி முகாம், UDIயின் பிராந்திய அலுவலகம் அல்லது IOMமிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பலவந்த மீள்பயணம்**
இறுதி நிராகரிப்பைப் பெற்ற பின்னரும் நீங்கள் சுயவிருப்பத்துடன் தாய்நாடு திரும்பாவிட்டால், மீள்பயணக்காலக்கெடு முடிந்ததும் பொலிசாரால் நீங்கள் நாட்டை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்படுவீர்கள்.

இவ்வாறாக வெளியேற்றப்படும் பட்சத்தில் இச்செலவை நீங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். விமானப் பயணச்சீட்டிற்கான பணம் உங்களிடம் இல்லையென்றால் அரசாங்கம் அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளும், ஆனால் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு. உங்களது வெளியேற்றச் செலவை நீங்கள் ஏற்காவிட்டால், எதிர்காலத்தில் நோர்வே மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கான விசா மற்றும் நுழைவு அனுமதி உங்களுக்கு மறுக்கப்படலாம்.

**நீங்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டால்**
நீங்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டால் உங்களை விரைவாக நோர்வேயிலிருந்து வெளியேற்றுவதற்காக உங்களது புகலிட விண்ணப்பம் மிக வேகமாகக் கையாளப்படும். நீங்கள் சட்டத்தை மீறும் பட்சத்தில்கூட நோர்வேயை விட்டு வெளியேற்றப்படலாம். இதன் விளைவாக எதிர்காலத்தில் நோர்வே அல்லது பெரும்பாலான பிற ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைய முடியாது.

## 6. புகலிட நேர்காணலிற்கான முக்கிய அறிவுரைகள்

- நீங்கள் எக்காரணத்திற்காக தாய்நாட்டை விட்டு வெளியேறினீர்கள் அத்தோடு மீள் பயணத்திற்கு எதையிட்டு பயப்படுகிறீர்கள் என நுணுக்கமாகவும் விபரமாகவும் கூறவும்.
- மறுபடியும் நீங்கள் நாட்டிற்கு சென்றால் குறிப்பாக உங்களுக்கு என்ன நிகழும், அத்தோடு உங்களது நேரடி அநுபவங்களை முன் வையுங்கள்.
- இயன்றவரை நுட்பமாக கூறுங்கள்.
- 18 வயதிற்கு உட்பட பிள்ளைகள் உங்களுடன் வந்திருந்தால், அவர்களது நிலவரத்தையும் அவர்களது அநுபவங்களையும் கூறுங்கள்.
- உங்களுக்கு ஏதாவது புரியாவிடில் நேர்காணும் ஊழியரிடம் விளக்கம் கோருங்கள்.
- உங்களது புகலிட விண்ணப்பத்திற்கு அர்த்தமளிக்கவல்ல ஆவணங்கள் இருப்பின், நேர்காணலுக்கு செல்லும் போது அவற்றை எடுத்துச் செல்வது நன்று.
- உண்மையைக் கூறுங்கள். பிழையான தகவல்களை வழங்குவதால் உங்கள் புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்படும் நிலை ஏற்படலாம். இதனால் நீங்கள் நோர்வேயிலிருந்து வெளியேற்றப்படலாம், அத்தோடு இதன் விளைவாக நோர்வே மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளினுள் எதிர்காலத்தில் உள்நுழைய முடியாது.

**புகலிடம் விண்ணப்பிக்கும் பெண்கள்**
சிலவேளைகளில் ஆண்களை விட, பெண்கள் வேறுபட்ட துன்புறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக ஆண்களுடன் இதைப்பற்றி உரையாடுவது கஷ்டமாக இருக்கலாம். நீங்கள் விரும்பினால் ஒரு NOAS பெண் ஊழியருடன் உரையாடலாம். தகவல் திரைப்படத்தைப் பார்த்தவுடன் இது பற்றி NOASஇடம் தெரிவிக்கவும்.

UDI இல் பெண் விசாரணையாளரால் விசாரிக்கப்படவேண்டும் அத்துடன் பெண் மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்தவேண்டும் என விரும்பின் இது பற்றி நீங்கள் NOAS உடனான உரையாடலின்போது தெரிவிக்கவும்.

**18 வயதிற்குக்குக் கீழுள்ள பிள்ளைகளை உங்களுடன் அழைத்து வந்திருக்கிறீர்களா?**
புகலிட விண்ணப்பப் பரிசீலனையின்போது பிள்ளைகளின் நிலை முக்கிய பங்கு வகிக்கும். புகலிடம் கோர பிள்ளைக்கு சுய காரணங்கள் ஏதேனும் உண்டா எனவும், பிள்ளை தனது வாழ்க்கை நிலையைப் எவ்வாறு கருத்தில் கொள்கின்றது ஆகிய இரண்டையும் அறிந்துகொள்ள UDI விரும்புகிறது. இது பற்றி UDIயிடம் புகலிட நேர்காணலின் போது நீங்கள் தெரிவிப்பது முக்கியம்.

ஏழு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை UDI நேர்காணல் செய்யும். பிள்ளைதான் அனுபவித்தவற்றை தனது சொந்த வார்த்தைகளிலேயே விளக்கிக் கூற வாய்ப்பு அளிக்கப்படுவது முக்கியம். சில சமயங்களில் வளர்ந்தோரை விட பிள்ளைகள் பிரச்சனைகளை தீவிரமானதாக அனுபவிப்பர். பிள்ளையின் விருப்பத்திற்கு முரணாக UDI பிள்ளையை நேர்காணல் செய்வதில்லை.

## 7. புகலிட விண்ணப்பதாரி என்ற ரீதியில் உங்களது பொறுப்புகளும் கடமைகளும்

**உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பதற்குரிய கடமையை நீங்கள் கொண்டுள்ளீர்கள்**

நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்வது நோர்வே அரசிற்கு முக்கியம். இதனால் நீங்கள் யார் என்பதை ஊர்ஜிதப்படுத்தக் கூடிய ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிப்பது முக்கியம். உங்கள் தாய்நாட்டின் அரசினால் நீங்கள் தேடப்பட்ட நபராயின் அவர்களுடன் தொடர்பு கொண்டு அடையாள ஆவணங்களை நீங்கள் பெற்றுத் தர வேண்டும் என நோர்வே அரசு கோராது.

உங்களது அடையாளத்தில் நோர்வே அரசிற்கு சந்தேகங்கள் இருந்தால், ஏற்படும் விளைவுகள்:

- அவநம்பிக்கை ஏற்படல்
- தங்கும் அனுமதிக்கான சாத்தியத்தைக் குறைக்கும்
- சாதாரணமாக நீங்கள் பெறக் கூடிய உரிமைகளை இழக்க நேரிடும்
- மட்டுப்படுத்தப்பட்ட தங்கும் அனுமதி கிடைக்கலாம்

**நீங்கள் சரியான தகவலை அளிப்பதற்கு கடமைப்பட்டுள்ளீர்கள்**
புகலிட விண்ணப்பதாரி என்ற அடிப்படையில் எக்காரணத்திற்காக பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்கிறீர்கள் என நீங்கள் விளக்க வேண்டும். இதனால் அவசியமான அத்தாட்சிப்பத்திரங்களை வழங்குவதற்கும், ஒத்துழைப்பதற்கும் உங்களால் இயன்றளவு முயற்சிக்க வேண்டும். நீங்கள் பாதுகாப்புக் கோரி விண்ணப்பிக்க முன் எவர் எவற்றைத் கூறியிருந்தாலும் நோர்வே அரசிற்கு உங்கள் புகலிட விண்ணப்பம் பற்றிய பின்னணி விபரங்களை சரியான முறையில் வழங்குவது முக்கியம். உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும்.
இதன் விளைவாக நீங்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம்.

**நீங்கள் புகலிட விண்ணப்பதாரியாக இருக்கும் கால கட்டத்தில் வேலை செய்ய உங்களுக்கு உரிமை இருக்கலாம்**

உங்களது அடையாளத்தை ஊர்ஜிதப்படுத்தி அத்தோடு நீங்கள் டப்ளின் ஒப்பந்தத்தின் கீழ் உள்ளடக்கப்படாவிடின் நீங்கள் புகலிட விண்ணப்பதாரியாக இருக்கும் கால கட்டத்தில் வேலை செய்ய உங்களுக்கு உரிமை இருக்கலாம். வேலை அனுமதி ஆறு மாதங்களிற்கு செல்லுபடியாகும், இருந்தபோதும் இது புதுப்பிக்கப்படலாம்.

**உங்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான உரிமையுண்டு**
உங்களது புகலிட விண்ணப்பத்தின் பதிலுக்காக நீங்கள் காத்திருக்கும் காலத்தில், அவசியமான மருத்துவ உதவிக்கான உரிமையைக் கொண்டுள்ளீர்கள். 12 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளிற்கு மருத்துவச்சிகிச்சை இலவசமாகும். நோர்வேயில் உள்ள அனைவரும் சாதாரணமாக சுயபங்குக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். உங்களுக்கு உளவியல் நிபுணரின் உதவி தேவைப்பட்டால், இதற்கான செலவை செலுத்தும் வண்ணம் UDI இடம் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற முகாமிலுள்ள ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கு கடும் சுகயீனம் இருந்தால் இதை UDI இடம் அறிவித்தல் நன்று.

**உங்களது புகலிட விண்ணப்பத்தை வாபஸ் பெற வாய்ப்பு உண்டு**
நீங்கள் எந்த கட்டத்திலும் உங்களது புகலிட விண்ணப்பத்தை வாபஸ் பெறலாம். இவ்வாறான பட்சத்தில் தாய்நாடு திரும்புவதற்கான உதவி கோரி நீங்கள் IOM இடம் விண்ணப்பிக்க வாய்ப்புண்டு.

## 8. தகவல் பாதுகாப்புக் கடமை

பொலிஸ், UDI, UNE, மொழிபெயர்ப்பாளர், வழக்கறிஞர், சுகாதரப்பணியாளர் மற்றும் NOAS என்பவற்றிற்கு தகவல் பாதுகாப்புக் கடமையுண்டு. இதன் பொருள் நீங்கள் உங்கள் புகலிட விண்ணப்ப விடயமாக வழங்கும் தகவல்களை இவர்கள் உங்கள் தாய்நாட்டு அதிகாரிகளுக்கு வழங்க முடியாது. உங்களது புகலிட விண்ணப்ப விடயமாக செயலாற்றாத நபர்களுக்கு கூட நீங்கள் கூறியவற்றை இவர்கள் தெரிவிக்க முடியாது. தகவல் பாதுகாப்புக் கடமையை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் உங்களுக்கு எதற்காக பாதுகாப்பு அவசியம் என்பதை விபரமாக விளக்க நீங்கள் பயப்படத் தேவையில்லை.

# முகவரிகள்

## பொலிசின் குடிபெயர்வு பிரிவு (POLITIETS UTLENDINGSENHET)

புதிதாக வந்துள்ள புகலிட விண்ணப்பதாரிகளை பொலிசார் பதிவுசெய்வார்கள். நிராகரிப்பு பெற்ற பின்னர் சுய விருப்பத்தில் நோர்வேயை விட்டு வெளியேறாத புகலிட விண்ணப்பதாரிகளையும் பொலிஸசார் பலவந்தமாக நாட்டை விட்டு அழைத்துச் செல்வர்.

**அஞ்சல் முகவரி:** Postboks 8102 Dep , NO-0032 Oslo, Norway
**அலுவலக முகவரி:** Christian Krohgs gate 32, 0186 Oslo
தொலைபேசி: +47 22 34 24 00, தொலைநகல்: +47 22 34 24 80
மின்னஞ்சல்: pu@politiet.no

## வெளிநாட்டவர் விடய ஆணையகம் ( UDI)

என்பது ஓர் அரச நிறுவனம். இதன் சில தொழிற்பாடுகளாவன புகலிடம், குடும்ப மீள் இணைவு, விசா மற்றும் குடியுரிமை ஆகியவற்றின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதாகும்.
UDI ஆனது அகதி முகாமிற்கான பொறுப்பையும் கொண்டுள்ளது.

**அஞ்சல் முகவரி:** Postboks 8108 Dep , NO-0032 Oslo, Norway
**அலுவலக முகவரி:** Hausmannsgt. 21, 0182 Oslo
தொலைபேசி: +47 23 35 15 00, தொலைநகல்: +47 23 35 15 01
வலைத்தளம்: www.udi.no, மின்னஞ்சல்: ots@udi.no

## புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (IOM)

உதவியுடன் சுயவிருப்பத்தின் பேரில் மீள்பயணம் செய்தல் பற்றிய தகவல்

**அஞ்சல் முகவரி:** Postboks 8927 Youngstorget, 0028 Oslo
**அலுவலக முகவரி:** Storgata 10a, 2. etg, 0155 Oslo
தொலைபேசி: +47 23 10 53 20, தொலைநகல்: +47 23 10 53 21
மின்னஞ்சல்: osloreturn@iom.int

அலுவலக நேரம்: வாரநாட்கள்: 10:00 – 15:00, வாரவிடுமுறை: மூடப்பட்டிருக்கும்

## வெளிநாட்டவர் விவகார மேன்முறையீட்டு நீதிமன்றம் (UNE)

ஆனது UDI இனால் வழங்கப்பட்ட நிராகரிப்பின் மேன்முறையீட்டை பரிசீலிக்கும் நீதிமன்றத்திற்கு நிகரான ஓர் அரச நிருவாக அமைப்பு.

**அஞ்சல் முகவரி:** Postboks 8165 Dep., NO-0034 Oslo, Norway
**அலுவலமுகவரி:** Stenersgt. 1B/C, 0050 Oslo
தொலைபேசி: +47 21 08 50 00, தொலைநகல்: +47 21 08 50 01
வலைத்தளம்: www.une.no, மின்னஞ்சல்: postmottak@une.no

## நோர்வேயின் செஞ்சிலுவைச் சங்கத்தின் (NORGES RØDE KORS)

கண்டுபிடிக்கும் சேவைகள் போர், சண்டை அல்லது பேரழிவுச் சம்பவம் ஆகியவற்றினால் பிரிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களிடையே மீண்டும் தொடர்பு ஏற்படுத்த உதவுகிறது.
UDI இற்கோ அல்லது பிறருக்கோ, உங்களைப் பற்றிய தகவல்களை செஞ்சிலுவைச் சங்கம் அளிப்பதில்லை. இந்தச் சேவை இலவசம்.

**அஞ்சல் முகவரி:** Postboks 1 Grønland, NO-0133 Oslo, Norway
**அலுவலமுகவரி:** Hausmannsgt. 7, 0186 Oslo
தொலைபேசி: +47 22 05 40 00
வலைத்தளம்: www.rodekors.no, மின்னஞ்சல்: tracing@redcross.no

NOAS என்பது அரசு சார்பற்ற மனித உரிமைகளுக்கான அமைப்பாகும். இது புகலிடம் கோருபவர்களுக்கு தகவல் மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குகிறது.

நோர்வேயில் புகலிடம் கோரும் உங்களுக்கும் மற்றும் பாதுகாப்பு கோரி விண்ணப்பிப்போருக்குமான முக்கிய தகவல்களை இக்கையேடு கொண்டுள்ளது.

NOAS

**புகலிட விண்ணப்பதாரிகளுக்கான நோர்வேயிய சங்கம் (NOAS)**
அலுவலக முகவரி: Torggata 22, 0183 Oslo, Norway
அஞ்சல் முகவரி: P. b. 8893 Youngstorget, NO-0028 Oslo, Norway
தொலைபேசி: +47 22 36 56 60, தொலைநகல்: +47 22 36 56 61
மின்னஞ்சல்: www.noas.org, மின்னஞ்சல்: noas@noas.org